[12th March 1959

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Two, Sir.

(b) The two dramas 'Poreval' and 'Dasavatharam' enacted by Sri M. R. Radha and party were considered to be objectionable performances in that they deliberately intended to outrage the religious feelings of a class of citizens of India by insulting, blaspheming and profaning the religious beliefs of that class and were grossly indecent, and obscene.

State Transport Advisory Committee

* 750 *Q.*—SRI A. R. SUBBIAH MUDALIAR : Will the Hon. the Minister for Electricity be pleased to state the number of small Bus Operators in the State Transport Advisory Committee constituted after 15th July 1958?

THE HON. SRI V. RAMAIAH : In the Committee, there are four members representing bus operators' interests.

SRI A. R. SUBBIAH MUDALIAR : இந்த நாலு பேர்களில் ஸ்மால் பஸ் ஆபரேட்டர்கள் இருக்கிறார்களா ? அப்படி இல்லாவிட்டால் அவர்களையும் சேர்ப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI V. RAMAIAH : அட்வைசரி கமிட்டியில் ஸ்மால் பஸ் ஆபரேட்டர்களையோ அல்லது பெரிய பஸ் ஆபரேட்டர்களையோ போட வேண்டும் என்ற முறையில் அமைக்க வேண்டுமென்ற அவசியம் ஒன்றுமே கிடையாது. இது ஒரு அட்வைசரி கமிட்டி. மாகாணத்தில் இருக்கிற பஸ் போக்குவரத்தை திறமையாக நடத்துகிறவர்களையும் பஸ் போக்குவரத்து சம்பந்தப்பட்டவர்களையும் தனிப்பட்டவர்களையும் சேர்த்த கமிட்டிதான். ஸ்மால் பஸ் ஆபரேட்டர்கள்தான் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.

SRI K. PERIANNAN : இந்தக் கமிட்டியில் ஏதாவது ஹரிஜன மெம்பர்கள் இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI V. RAMAIAH : கனம் அங்கத்தினர் சுப்பிரமணியம் அவர்கள் இருக்கிறார். அவர் ஹரிஜன மெம்பர் என்றே நினைக்கிறேன்.

MR. SPEAKER : Questions are over.

II. VOTING ON DEMANDS FOR GRANTS FOR THE YEAR 1959-60—*cont.*

DEMAND II—EXCISE DEPARTMENT AND DEMAND XV—POLICE.

MR. SPEAKER : இன்றையதினம் 15-வது டிமாண்ட் போலீஸும் இரண்டாவது டிமாண்ட் எக்ஸைஸ் பற்றிய விவாதமும் நடக்கும். கனம் கோவிந்தசாமி அவர்கள் தனது 73-வது வெட்டுப் பிரேரணையையும், இரண்டாவது டிமாண்டிலுள்ள 89-வது வெட்டு பிரேரணையையும் பிரேரேபிப்பார். அவைகளுக்கு ஆதரவாக எதிர் கட்சியில் முதலில் கனம் கோவிந்தசாமி அவர்கள் பேசுவார். தலைவர் என்ற ஹோதாவில் கனம் பி. எஸ். சின்னதுரை அவர்கள் கடைசியில் 20 நிமிஷங்கள் பேசுவார். கனம் அமைச்சர் அவர்கள் 45 நிமிஷங்கள் பேசுவார். இப்படி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. மற்ற அங்கத்தினர்கள் ஒவ்வொருவரும் தலைக்கு பத்து பத்து நிமிஷங்கள் பேசலாம் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது. முதல் முதலில் கனம் கோவிந்தசாமி அவர்களைத் தன்னுடைய வெட்டுப் பிரேரணைகளை பிரேரேபிக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். கனம் அமைச்சர் அவர்கள் தன்னுடைய மானியக் கோரிக்கையை பிரேரேபிக்கலாம்.